டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.11.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 109 - Madurai | Online Edition

# தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் விதைகள் சட்டம் கொண்டு வரப்படும்

## மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தகவல்

புது தில்லி, அக்.31

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் விதைகள் சட்டம் கொண்டு வரப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்து உள்ளார். புதுதில்லி தேசிய விவசாயிகள் உற்பத்தி அமைப்பின் மாநாட்டை தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.

விவசாயிகளை உற்பத்தியாளர்களாகவும், தொழில்முனை வோராகவும், வர்த்தகர்களாகவும் உருவாக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர் இதன் மூலம் விவசாயிகள் நேரடியாக பயனடை முடியும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளின் நலன் கருதி ஒருங்கிணைந்த வேளாண் நடைமுறைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

மேலும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் வகையில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

போலியான விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

உள்ளூர் தயாரிப்புகளுக்கு குரல் கொடுப்பதன் மூலம் தற்சார்பு நிலையை எட்டுவதற்கும், பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் வேளாண் உற்பத்தி அமைப்புகள் உதவிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இந்த மாநாட்டில் 24 மாநிலங்கள் மற்றும் 140 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், வேளாண் உற்பத்தி அமைப்புகள் பங்கேற்றுள்ளன.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் நடைபெற்ற கண்காட்சியில் பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள், இயற்கை வேளாண் பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் போன்ற 267 தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

# நெற்பயிர்களை தாக்கும் நெல் பழ நோய் மற்றும் அதனை தடுக்கும் வழிமுறைகள்



ராணிப்பேட்டை, அக்.31

நெற்பயிர்களை தாக்கும் நெல் பழ நோய் அதனை தடுக்கும் வழிமுறைகள் குறித்து ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்தாவது,

நெமிலி வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிர் களில் நிலவி வரும் பனி மற்றும் தொடர்மழை சூழலினால் நெற்கதிர்களை நெல் பழ நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. நெற்பழ நோய் என்பது ஒருவகை பூஞ்சாண நோயாகும்.

## நோயின் அறிகுறிகள்

நெற்கதிர்கள் முதிர்ச்சி அடையும் சமயத்தில் தென்படும். இது பூக்கும், பால் பிடிக்கும் மற்றும் கதிர் முற்றும் தருணங்களில் நெல் பயிரை தாக்கி பெருமளவில் மகசூல் இழப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இந்நோய் தாக்கப்பட்ட விதைகள் மூலமாகவோ, மண்ணில் காணப்படும் பூஞ்சாண வித்துக்கள் மூலமாகவோ, காற்றின் மூலமாகவோ நோய் தாக்கப்பட்ட வயலில் இருந்து மற்ற வயல் களுக்கு பரவும் அபாயம் உள்ளது. பூக்கும் தருணங் களில் தொடர் மழை மற்றும் ஈரப்பதமே இந்நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம். பலத்த காற்று இந்நோய் பக்கத்து வயல் களுக்கு பரப்புவதற்கு முக்கிய காரணமாகும். முதலில் நெற் கதிரில் சில நெல் மணிகளே பாதிக்கப்படுகின்றன. பின்னர் மஞ்சள் நிற வெல்வெட் பழங்கள் போன்று மாறுகின்றன. பந்து போன்ற கரிப்பூட்டைகள் முதலில் சிறியதாக இருந்து பின்னர் 1 செ.மீ அளவிற்கு வளர்ந்து விடும். கரிப்பூட்டை கதிர் முழுவதும் பரவி பின்னர் கரும்பச்சை நிற வெல்வெட் பந்து போன்று காட்சி அளிக்கும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

வயல் வரப்புகளை களைகள் இன்றி சுத்தமாகவும் பயிர்களை தொடர் கண்காணிப்பிலும் வைத்திருக்க வேண்டும். நோயற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். எதிர்ப்பு திறன் உள்ள ரகங்களை பயிரிட வேண்டும். விதை நேர்த்தி கார்பன்–டை சைம் 2 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தேவைக்கு அதிகமாக யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அளிப்பதை தவிர்க்க வேண்டும் மற்றும் தேவையான தழைச்சத்தை பிரித்து இட வேண்டும். நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கண்ணாடி இலை பருவத்தில் ஒருமுறை மற்றும் பூக்கும் தருணத்தில் ஒரு முறை என இரு முறை ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு மருந்து 200 கிராம் அல்லது புரபிகோனசோல் மருந்து 200 மில்லி இவற்றில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும். இந்நோயினைக் கட்டுப்படுத்த இயலாது என்பதால் வரும் முன்னர் காப்போம் என்ற அடிப்படையில் பஞ்சு கட்டும் பருவத்திலும் பூக்கும் பருவத்திலும் இரண்டு முறை மேற்கண்ட பூஞ்சாண மருந்துகளை தெளிப்பதன் மூலம் இந்நோயை திறம்பட கட்டுப்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் 2025 நவம்பர் மாத பயிற்சி அட்டவணை

| நாள் | பயிற்சியின் பெயர் மற்றும் நடைபெறுமிடம் |
|---|---|
| 07.11.25 | நிலக்கடலையில் பயிர் மேலாண்மை மற்றும் விதை உற்பத்தி – இடம் : இடக்கொண்டான்பட்டு |
| 08.11.25 | பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் – இடம் : வடமூர் |
| 12.11.25 | தொழில் முனைவோருக்கான சந்தைமயமாக்குதல் இடம் : கே.வி.கே. விருத்தாசலம் |
| 13.11.25 | கரும்பு சோகை மட்க வைத்தல் பற்றிய பயிற்சி இடம் : நெல்லிக்குப்பம் |
| 14.11.25 | அசோலா பயன்கள் மற்றும் உற்பத்தி தொழில் நுட்பங்கள் – இடம் : மஞ்சக்கொல்லை |
| 15.11.25 | பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை – இடம் : சிறுகாலூர் |
| 18.11.25 | நொதித்த அங்கக உர பயன்பாடு – இடம் : நெல்லிக்குப்பம் |
| 20.11.25 | சிறுதானியத்தில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்தல் – இடம் : கே.வி.கே. விருத்தாசலம் |
| 21.11.25 | நெற்பயிரில் களை மற்றும் நீர் மேலாண்மை இடம் : பூதங்குடி |
| 22.11.25 | காய்கறி பயிர்களில் அங்கக வேளாண்மை இடம் : பல்லவராயநத்தம் |
| 25.11.25 | விதை உற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை இடம் : மேலபுதுபேட்டை |
| 26.11.25 | காளான் வளர்ப்பு – இடம் : கே.வி.கே. விருத்தாசலம் |
| 27.11.25 | உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி இடம் : நந்தப்பாடி |
| 28.11.25 | பாரம்பரிய நெல் இரகங்களில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தல் – இடம் : பெரியகொசப்பள்ளம் |

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலை மற்றும் நிலஎழிலூட்டல் திறன் மேம்பாட்டு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.31

தமிழ்நாடு அரசின் - தமிழ்நாடு திறன் மேம்பாட்டுகழகம், தொழில்நுட்ப வணிக காப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் ‘நான் முதல்வன் வெற்றி நிச்சயம்‘ திட்ட நிதி






உதவியுடன் கிராமப்புற இளைஞர்களுக்கான தோட்டக்கலை மற்றும் நிலஎழிலூட்டல் திறன் மேம்பாட்டு பயிற்சி துவக்க விழா 30.10.25 காலை 9.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் A.V.ஞானசம்பந்தம், நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, தொழில்நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வரவேற் புரையாற்றினார். முனைவர் E.சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தலைமையுரையாற்றினார். முனைவர் C.முரளிதரன், பேராசிரியர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் பயிற்சியாளர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார். மேலும் முனைவர் M.கங்கா, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் துறை தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் இப்பயிற்சியின் அறிமுக அமர்வை தொடங்கி வைத்து அதன் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் C.பரணி, வணிக செயலாளர், தொழில்நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட பயனாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சி தொழில்நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 29.11.2025 வரை சுமார் ஒரு மாத காலம் நடைபெற உள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இயந்திரம் மூலம் நெல் நடவு குறித்த செயல்முறை விளக்கம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சி, அக்.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நெல் நடவு குறித்த செயல்முறை விளக்கம் மற்றும் விழிப்புணர்வு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் கரும்பு ஆராய்ச்சி நிலைய தெற்குப் பண்ணை வளாகத்தில் நடைபெற்றது.

நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு வந்திருந்த அனைவரையும் வரவேற்று இன்றைய காலகட்டத்தில் வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம், செயல்பாடு குறித்தும், வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலைய செயல்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார்.

இந்நிகழ்ச்சியின் தலைமை உரையை குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர் ராஜ்குமார் ஆற்றினார். அவர் தனது உரையில் நெல் நடவு இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்தும் நெல் நடவு இயந்திரத்தை பயன் படுத்துவதால் நாற்று நடுதல் வேகமாகவும் சீராகவும் இருக்கிறது எனவும் விவசாயிகளுக்கு நேரம் மற்றும் உழைப்பு மிச்சமாகிறது எனவும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து நெல் நடவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம் குறித்த தகவல்களை பண்ணை இயந்திரங்கள் மற்றும் சக்தி பொறியியல் துறையின் தலைவர் முனைவர் பத்மநாதன் விளக்கினார். குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரியின் அடிப்படை பொறியியல் மற்றும் பயன்பாட்டு அறிவியல் துறையின் தலைவர் முனைவர் மாசிலமணி பேசுகையில் நெல் நடவு இயந்திரத்தின் முக்கியத்துவம் குறித்தும் அதனை பயன்படுத்துவதால் ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய சாதாரணமாக 12 ஆட்கள் வரை தேவைப்படும், ஆனால் இந்த இயந்திரத்தை கொண்டு நடவு செய்கையில் ஒரு ஏக்கரை ஒரு மணி நேரத்தில் நடவு செய்து முடிக்கலாம். மேலும் 8 மணி நேரத்தில் குறைந்தபட்சம் 5 ஏக்கர் அதிகபட்சம் 8 ஏக்கர் வரை நடவு செய்யலாம்.

இதனால் சேதம் அடையும் நாற்றுகள் விகிதம் குறைகிறது என்றும் பொருளாதார திறன் அதிகரிக்கிறது எனவும் கூறினார். முனைவர் நாகேஸ்வரி லாபகரமான நெல் சாகுபடிக்கு இயந்திரங்களின் பயன்பாடுகள் பற்றி விளக்கினார். இறுதியாக முனைவர் த.ஜானகி நன்றியுரை ஆற்றினார். இதில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மேற்கண்ட தகவலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

## கிராமப்புற சுயஉதவிக்குழு பெண்களுக்கான திறன் மற்றும் விற்பனை குறித்த புத்தாக்கப் பயிற்சி

திருவண்ணாமலை, அக்.31

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லியிலுள்ள வேளாண் அறிவியல் மையம், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியுடன் (நபார்டு) இணைந்து வாழ்வாதார நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கிராமப்புற சுயஉதவிக்குழு பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறுதானியங்கள், நிலக்கடலை, பாரம்பரிய அரிசி மற்றும் பாலில் இருந்து புதுமையான மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிப்பில் திறன் மற்றும் விற்பனை பற்றிய பயிற்சி தெள்ளாரில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வே.சுரேஷ், வரவேற்புரை நல்கினார்.

மேலும் அவர் பேசுகையில் தற்சார்பு பொருளாதாரத்தில் சுயஉதவிக்குழு பெண்களின் பங்கு மற்றும் மதிப்பு கூட்டு பொருட்களுக்கு அரசு தரும் முக்கியத்துவம் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை மாவட்ட விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நபார்டு) மாவட்ட வளர்ச்சி மேலாளர் எம்.விஜய் நீஹர், வாழ்வாதார நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் சிறப்பம்சங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிப்பு திறன் மற்றும் விற்பனைக்கான சந்தை வாய்ப்புகள் பற்றியும் சுயஉதவிக்குழு பெண்களிடையே சிறப்புரை ஆற்றினார்.




வந்தவாசி வட்டாரத்தின் விற்பனை உதவி வேளாண் அலுவலர் இரா.மீனா, மதிப்பு கூட்டு பொருட்களின் விற்பனை ஊக்கு விப்பதற்கு அரசு வழங்கும் சந்தை வாய்ப்புகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து சுய உதவிக்குழு பெண்களுக்கு எடுத்து கூறினார்.

வேளாண்மை அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் த.மார்க்ரெட், மதிப்பு கூட்டு பொருட்களின் சந்தைப்படுத்துதலின் நுணுக்கங்கள், தயாரிப்பு பொருட்களை சுகாதார முறையில் கையாளுதல் குறித்தும் விளக்கம் அளித்தார். தெள்ளார் மற்றும் வந்தவாசி வட்டாரத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து 60 நபர்கள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# காலமெல்லாம் காக்கும் ‘காளான் வளர்ப்பு தொழில்‘

விவசாயத்துடன் எளிதாக செய்யக்கூடிய சிறு தொழிலை, அதுவும் வேளாண்மையுடன் சார்ந்த தொழில் செய்தால் கூடுதலான வருமானம் கிடைப்பதுடன் முழு நேர வேலை வாய்ப்பும் உண்டாகும். அவ்வகையில் விவசாயிகள் தங்களுடைய பண்ணைகளில் காளான் வளர்ப்பு தொழிலை மேற்கொள்ளலாம்.




**காலமெல்லாம் காக்கும் காளான் வளர்ப்பு சிறந்ததா?**

இன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடும் உணவாக 'காளான்' (MUSHROOM) உள்ளது. இது பூஞ்சான வகையை சேர்ந்த பச்சையம் இல்லாத தாவரமாகும். அனைத்து உணவங்களிலும் இறைச்சிக்கு இணையாக காளான்கள் பல வகையான உணவு பெயர்களில் விற்பனை செய்யப்படுகிறது. காளான் வளர்ப்பு குறித்து அனைத்து கே.வி.கே மையங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

**காளான் அமைப்பு எப்படி இருக்கும்?**

பொதுவாக தலைப்பகுதி குடை, சிப்பி போன்ற வடிவங்களில் காணப்படும். தலைப் பகுதியின் அடியில் வரி வரியான செதில் போன்ற அமைப்புகள் இருக்கும். இவற்றுக்கிடையில் லட்சக்கணக் கான காளான் பூஞ்சான நுண் வித்துகள் நிறையவே இருக்கும்.



**இயற்கையாகவே காளான் தோன்றுமா?**

இயற்கையில் இவ்வித்துகள் மக்கிய பண்ணை கழிவுகள், அங்கக பொருட்களில் வளர்ந்து பூஞ்சான இழையாக படர்ந்திருக்கும். சாதக மான சூழல் நிலவும் போது, அதாவது மின்னல் இடியுடன் கூடிய மழைக்குப்பின் பூஞ்சான இழைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து காளானாக வளரும். இயற்கையில் வளரும் அனைத்து காளான்களும் உணவுக்காக பயன்படுத்த இயலாது. ஏனெனில் சில வகையில் நச்சுத்தன்மை உடையதாக இருக்கும்.

**இதனை எப்படி கண்டுபிடிப்பது?**

சாதாரணமாக உணவு காளான்களை தொடும் போதும், வெட்டும் போது நிறம் மாறாமல் இருக்க வேண்டும். மணம் வீச வேண்டும். கருப்பாக இருக்கக்கூடாது.

**காளான் வளர்ப்பின் முக்கியத்துவம்?**

காளான் வளர்ப்புக்கு பண்ணைக்கழிவுகள் (வைக்கோல்) முக் கிய ஊடகமாக உள்ளது. பண்ணைக்கழிவுகளில் 25% காளான் சாகுபடிக்கு பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ளவை கால்நடைகள் தீவனமாகவும் மீதமுள்ளவை எரிக்கப்பட்டு வருகின்றன. காளான் வளர்ப்பிற்கு சிறிய இடமே போதுமானதாகும். காளான் அறுவடை முடிந்தவுடன் அவற்றை இயற்கை உரமாக மாற்றி உபயோகிக்க லாம். பொறுமையும் நிதானமும் இருந்தால் காலமெல்லாம் காளானை வளர்க்கலாம், கை நிறைய காசும் பார்க்கலாம். மருத்துவ குணமுள்ள காளான்களை உட்கொண்டால் ஆரோக்கிய மான வாழ்வு வாழலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சம்பா நெற்பயிருக்கு உடனடியாக காப்பீடு செய்ய வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

புதுக்கோட்டை, அக்.31

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா நெற்பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய கடைசி தேதி 15.11.2025 வரை காத்திராமல் உடனடியாக பயிர் காப்பீடு செய்யுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு 2025-26ஆம் ஆண்டிற்கு சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.36,000/- கடன் தொகையில், விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை 1.5 சதவீதம் மட்டுமே, அதன் படி ஏக்கருக்கு ரூ.540/- காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்தினால் போது மானது.

இந்த திட்டத்தில் பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் அவர்கள் கடன் பெறும் வங்கிகளில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

நடப்பு சம்பா பருவத்தில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயிர்காப்பீடு செய்ய கடைசி நாள் நவம்பர் மாதம் 15 ஆம் தேதி (15.11.2025) ஆகும். எனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் பயிர் காப்பீடு பதிவு செய்து இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பி லிருந்து தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள லாம். இந்த ஆண்டு முதல் தேசிய பயிர் காப்பீடு வலைதளத்தில் நேரடியாக பதிவு மேற்கொள்வதால் பதிவு செய்யக்கூடிய பயனாளியின் அலைபேசி எண்ணுக்கு வரும் (OTP--One Time Password) ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளீடு செய்யப்பட்ட பின்பு தான் பதிவு உறுதி செய்யப்படுகிறது.

ஆகையால் பயிர் காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு தேதி 15.11.2025 வரை காத்திராமல் உடனடியாக பதிவு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.


இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு படிவம், பதிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் 1435ஆம் பசலிக்கான நெல் சம்பா சாகுபடி அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகிய வற்றை இணைத்து பிரீமியத் தொகையினை தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது வணிக வங்கிகளிலோ அல்லது பொது சேவை மையங்களிலோ காப்பீடுசெய்து அதற்குரிய இரசீதை பெற்றுக் கொள்ளலாம்.




எனவே, விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்ப்பதற்கும், தங்களுடைய விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பதிவு செய்த விபரங்களை சரிபார்ப்பதற்கும், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில், காப்பீட்டு பிரிமீயத் தொகையை செலுத்தி தங்களது நெற்பயிரை முன்கூட்டியே பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தினையோ அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தினையோ தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்று புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வனக்கல்லூரியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் திறன் மேம்பாடு பயிற்சி



கோயம்புத்தூர், அக்.31

மேட்டுப்பாளையம், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மதிப்புகூட்டல் தொடர்பான இருபது நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியின் துவக்க விழா 30.10.25 அன்று ஓடந்துறை ஊராட்சி, ஊமப்பாளையம் கிராமத்தில் நடைப்பெற்றது.

இத்துவக்க விழாவில், சிறப்புரையாற்றிய வனக்கல்லூரியின் முதன்மையர் நிகார்ரஞ்சன், பயிற்சியின் சிறப்பு மற்றும் பட்டு கூட்டினைக் கொண்டு பல்வேறு விதமான உயர் மதிப்புடைய கைவினைப் பொருட்கள் செய்வதின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார். தலைமையுரையாற்றிய, பட்டு புழுவியல் துறை தலைவர் முனைவர் கு.அ.முருகேஷ் மல்பெரி சாகுபடி மற்றும் மல்பெரி பழத்தினைக் கொண்டு மதிப்பு கூட்டும் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கிக்கூறினார். வனக் கல்லூரியின் மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஐ.சேகர், திறன் மேம்பாட்டு பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி வாழ்த்துரையாற்றினார். இப்பயிற்சியில் 26 படித்த வேலையில்லா கிராமபுற பெண்கள் ஆர்வமாக கலந்து கொண்டனர். இத்துவக்க விழாவில் வனக் கல்லூரியின் விஞ்ஞானிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயிற்சியில், மல்பெரி சாகுபடி, மல்பெரி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மல்பெரி தண்டு அறுவடை, பட்டுப்புழு வளர்ப்பு மனை நோய் நீக்கம், பட்டுப்புழு வளர்ப்பில் ஊசி ஈ மேலாண்மை, மல்பெரி பழங்களிலிருந்து உயர் மதிப்பூட்டிய உணவுப் பொருட்கள் தயாரித்தல், எஞ்சிய பட்டுக் கூடுகளிலிருந்து, பூங்கொத்து, திருமண மாலை, அணிகலன்கள் மற்றும் மலர்க் குவளைகள் உற்பத்தி செய்தல் குறித்த செயல்முறை விளக்கத்துடன் தொழில்நுட்ப உரைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பயனாளிகளின் செயல்பாட்டு திறனை அதிகரிக்கும் பொருட்டு கண்டுணர்வு சுற்றுலா மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கொண்டைக்கடலை விதைப்பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு!



கோயம்புத்தூர், அக்.31

கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளுக்கு கொண்டைக்கடலை விதைப்பண்ணை அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 'பருவத்தே பயிர் செய்' என்பதற்கு ஏற்ப தற்போது ஐப்பசி – கார்த்திகை பட்டம் கொண்டைக்கடலை விதைக்க ஏற்ற பருவம்.

கொண்டைக்கடலை நல்ல மகசூல் தரவல்ல குளிர்காலத்துக்கு ஏற்ற பயிர். அரசு விதைப்பண்ணை அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை அலுவலகத்தை அணுகி அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட இரகங்களான NBeG-47, NBeG-49, NBeG-119 பெற்று கொள்ளலாம். NBeG-47, NBeG-49, இரகங்கள் 90 முதல் 105 நாட்கள் அறுவடைக்குத் தயாராகும். பூக்கள் ஊதா நிறத்தில் காணப்படும். NBeG-119 இரகமானது வெள்ளை நிறத்திலும் அதன் பூக்களும் வெள்ளை நிறத்தில் காணப்படும். இவை 90 முதல் 95 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும்.

விதைப்பண்ணைகளை அமைக்கும் விவசாயிகள் பயிர் விலகு தூரத்தை கடைபிடிக்க வேண்டும். அதாவது வேறு இரக கொண்டைக்கடலை பண்ணையில் இருந்து வயலை சுற்றி 10 மீட்டர் (ஆதார நிலை) விதை எனில் மற்றும் 5 மீட்டர் (சான்று நிலை) இடைவெளி விட்டு விதைக்க வேண்டும். மேலும் பிற இரக கலவன்கள் இருந்தால் அதனை உடனுக்குடன் நீக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும், விதைப்பண்ணைகளை விதைச் சான்று துறை அலுவலர்களால் பயிர் பூக்கும் பருவம் மற்றும் பயிர் முதிர்ச்சி பருவத்தில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வின் போது கலவன்கள் எண்ணிக்கை, பயிர் மகசூல் கணக்கீடு ஆகியவை மேற்கொள்ளப்படும் பிற இரக கலவன்கள் ஆதார நிலை எனில் 0.1.% (ஏக்கருக்கு 2 கலவன்கள்) மற்றும் சான்று நிலை எனில் 0.2% (ஏக்கருக்கு 5 கலவனகள்) மட்டும் அனுமதிக்கப்படும்.

வயல் தரத்தில் தேறும் விதைப்பண்ணைகளிலிருந்து விதைகள் அரசால் கொள்முதல் செய்யப்பட்டு, விதைச்சுத்தி பணிகள் மேற் கொள்ளப்பட்டு, அரசு விதைப்பரிசோதனை மையத்தில் ஆய்வு செய்யப்பட்டு, ஈரப்பதம், முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத் தூய்மை ஆகிய தேர்ச்சி பெறும் விதைகள் சான்றட்டைப் பொருத்தப் பட்டு சான்று விதைகளாக விவசாயிகளை அடையும். எனவே கொண்டைக்கடலை விதைப்பண்ணை அமைத்து பயன் பெற விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து கேட்டுகொண்டார்.

# உயிர்ம வேளாண்மையில் எலி கட்டுப்பாட்டு முறைகள்

1. ஒரு ஏக்கருக்கு சுமார் 4 முதல் 5 பப்பாளிக்காயை வெட்டித் துண்டுகளாக நறுக்கி வரப்புகளின் ஓரங்களில் வைக்க வேண்டும். இவற்றைச் சாப்பிடும் எலிகளின் வாயிலும் குடலிலும் எரிச்சல் உண்டாகும். எனவே அதற்குப் பிறகு எலி வயலை அண்டாது. சில சமயங்களில் எலி இறந்து போகவும் வாய்ப்புண்டு.

2. 2 முதல் 3 கிலோ கிராம் நெய்வேலி காட்டாமணக்கு விதை களை 3-5 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து அரை மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். பிறகு 2-3 கிலோ கிராம் சோள விதை களை அதனுடன் கலந்து மறுபடியும் அரை மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். இந்த விதைகளை வரப்போரங்களில் உள்ள எலித்துளைகளில் இட அதைச் சாப்பிடும் எலிகள் இறந்து விடும்.

3. ஒரு மண் பானையில் வைக்கோலை இட்டு அதன் மேல் தண்ணீர் தெளிக்க வேண்டும். அதன் அடிப்பாகத்தில் ஒரு சிறு துளை இட்டு எலி வளையின் மேல் கவிழ்த்துவிட வேண்டும். கவிழ்ப் பதற்கு முன் அந்தத் துளையில் நெருப்பிட்டு புகைமூட்டம் செய்ய வேண்டும். புகை வெளிவராதபடி துளையை மூட வேண்டும். இவ்வாறு செய்வதால் எலி மூச்சடைத்து இறந்துவிடும்.

4. தாழை மரத்தின் பட்டைகளை வெட்டி நெருக்கமாக வரப் போரங்களில் இட, வயலுக்குள் ஓடிவரும் எலிகளின் வயிற்றில் தாழம்பட்டைகளின் ஓரத்தில் உள்ள முட்கள் குத்தி காயம் ஏற்படுத் தும். இதனால் எலிகள் வயலுக்குள் வருவது தவிர்க்கப்படும்.

5. மிளகுத் தோலை எலிப்பொந்திற்கருகில் குவித்து எரிய வைத்து புகையூட்டம் செய்வதன் மூலம் எலியைக் கட்டுப்படுத்தலாம் அல்லது எள், கடலை அல்லது பேயெள்ளு மாவு 90 பங்கு, சர்க்கரை 5 பங்கு, நன்கு தூளாக்கப்பட்ட கண்ணாடி பல்பு 5 பங்கு ஆகியவற்றைக் கலந்து எலி நடமாட்டமுள்ள பகுதிகளில் வைக்க லாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல் பயிரில் நல்ல வேளாண் நடைமுறைகள் குறித்த பண்ணை பள்ளி



மதுரை, அக்.31

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் புதுக்குளம் பிட் 1 கிராமத்தில் B.15 Farm School - Good Agricultural Practices ICM IN PADDY - நெல் பயிரில் நல்ல வேளாண் நடைமுறைகள் குறித்த பண்ணை பள்ளி 29.10.2025ல் மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது.

நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் விதை நேர்த்தி முறைகள் குறித்து மதுரை இணை இயக்குனர் விளக்கி கூறினார். மத்திய திட்டம் துணை இயக்குனர் இராணி, கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நெல் பயிர்களுக்கான உரப்பரிந்துறை உயிர் உர பயன்பாடு பற்றி எடுத்துக் கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம், வேளாண்மை துறை மானிய திட்டங்கள் பற்றி கூறினார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜயபாரதி, பயிர்களுக்கு ஊட்டச்சத்து மேலாண்மை அவசியத்தை எடுத்து கூறினார். மேலும் நெல் விதை நேர்த்தி குறித்து உயிர் உர பயன்பாடு குறித்தும் செயல் விளக்கம் செய்து காட்டினார். வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் ஞான அருள் சாமுவேல் ராஜா, நெல் நாற்றங்கால் முறை விதை நேர்த்தி முறை பசுந்தாள் மற்றும் பசுந்தளைகள் பயன்படுத்தும் முறைகள் மண்புழு உர பயன்பாடு ரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்களை பயன்படுத்தும் முறைகள் கோணவிடர் பயன் படுத்தும் முறை செயல் விளக்கங்கள் செய்து காண்பித்து விவசாயிகளுக்கு பயிற்சி எடுத்தார். துணை வேளாண்மை அலுவலர் பாரதி, வேளாண்மை துறை மானிய திட்டங்கள் குறித்தும் நுண்ணீர் பாசன திட்டங்கள் குறித்தும் பயிற்சி கூறினார்.

விவசாயிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அனைவரையும் வரவேற்று முடிவுரை குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர்.




# சம்பா பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு

ஈரோடு, அக்.31

ஈரோடு மாவட்டம், சென்னிமலை மற்றும் ஈரோடு வட்டாரத்தில் சம்பா பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் சி.சசிகலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, சென்னிமலை மற்றும் ஈரோடு வட்டாரத்தில் நடப்பு சம்பா 2025 பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்து பயன்பெறலாம். சம்பா நெற்பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15ம் தேதி கடைசி நாளாகும். பிரிமியத்தொகை ஒரு ஏக்கருக்கு ரூ.577.50 செலுத்த வேண்டும்.

எனவே, விவசாயிகள் அருகே உள்ள பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி காப்பீடு செய்யலாம். காப்பீடு செய்ய ஆதார் அட்டைநகல், வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல், சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

# அங்கக வேளாண்மை முறையில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் பற்றிய தொழில்நுட்ப வளாக பயிற்சி



புதுக்கோட்டை, அக்.31

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அங்கக வேளாண்மை முறையில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் தொழில்நுட்பங்கள் பற்றிய நிலைய பயிற்சி 31.10.2025 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுப.மாரிமுத்து வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றுகையில் பழங்கள் மற்றும் காய்கறிகளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்கள் மற்றும் அவற்றின் இன்றியமையாமை பற்றி விவரித்தார். ரேவதி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் (கந்தர்வகோட்டை) சிறப்புரையாற்றினார்.

முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, நிலைய தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) மகளிர் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் பற்றி விளக்கினார். முனைவர் ம.தமிழச்செல்வன், தொழில்நுட்ப வல்லுநர், அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

முனைவர் அ.அழகேசன், தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), முனைவர் ஜெ.பாலமுருகன், தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்) மற்றும் முனைவர் பி.கார்த்திகேயன், தொழில் நுட்ப வல்லுநர் (நுண்ணியல்) ஆகியோர் அங்கக வேளாண்மை பற்றி விளக்கினர். இப்பயிற்சியில் 40 அங்கன்வாடி பணியாளர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தின் 13 வட்டாரங்களிலிருந்து கலந்து கொண்டனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உயர் ரக காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி மற்றும அமுல்ராஜ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# பூச்சி தாக்குதல் தடுப்பு முறைகள்

பயிரிடப்படும் பயிர்களை பூச்சிகள், நோய்கள், களைகள், விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றிடமிருந்து பாதுகாத்து நல்ல மகசூல் பெறுவதே பயிர் பாதுகாப்பு எனப்படும். மேலும் பயிர் பாதுகாப்பிற்கு உதவும் முறைகள் எளிதில் மேற்கொள்ளத் தக்கதாகவும், செலவு குறைவானதாகவும், சிறப்பாகக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும், மகசூலை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.



### பயிர் பாதுகாப்பின் அடிப்படை கொள்கைகள்



- தவிர்த்தல்
- அழித்தல்
- பாதுகாத்தல்
- எதிர்ப்பு சக்தி ஊட்டல்

### பயிர் பாதுகாப்பு முறைகள் (Plant Protection Methods)

பயிர் பாதுகாப்பு முறைகளை பொதுவாக கீழ்க்கண்டவாறு பகுத்து அறியலாம்.

### இயற்கை கட்டுப்பாடு

வான்சூழல் காரணிகளான வெப்பம், மழைப்பொழிவு, காற்றின் ஈரப்பதம், காற்றின் வேகம் ஆகியவை பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் இயற்கையிலேயே மனிதனைப் போலவே பயிர் பூச்சி மற்றும் நோய்கள் எதிரிகளால் தாக்குதலுக்கு உள்ளாகி இறக்கின்றன. இயற்கையான நில அமைப்புக்களான மலைகள், ஆறுகள், பாலைவனங்கள், கடல்கள் போன்றவைகளும் பூச்சி மற்றும் நோய்கள் பரவுவதை தடுக்கின்றன. உ.ம். 1. பெரு மழை, அசுவினி, இலைப்பேன் போன்ற மிருதுவான பூச்சிகளை அடித்துச் செல்கின்றன. மழை குறைந்து, மண் கடினமாவதால் நிலத்தினடியில் கூட்டுப்புழு நிலையில் உள்ள பூச்சிகள் வெளிவர இயலாமல் போகின்றன. மண்ணிலிருந்து தாக்கும் பூசண நோய்களின் வித்துக்கள் மழை நீரால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்து செல்லப்படுகிறது. மழையின்மையால் மண்ணின் வெப்பம் அதிகரிப்பதால் மேக்ரோஃபோமினா என்கின்ற பூஞ்சையால் ஒருவித உலர் வேர் அழுகல் நோய்ஏற்படுகிறது.

### எதிர்ப்பு பயிர் வகைகள் (Resistant Varieties)

பயிர் பாதுகாப்பில் செலவில்லாத மிக சிக்கனமுறை, பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட பயிர் இரகங்களைப் பயிரிடுவதாகும். எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களை தேர்வு செய்வதால் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதில்லை. மற்ற ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எளிது.

### விதை நேர்த்தி (Seed Treatment)

பயிர்களைத் தாக்கும் நோய்கள், பூச்சிகள் மற்றும் நூற்புழுக்கள் பரவுவதற்கு விதைகளும், விதையில்லா இனப்பெருக்கப் பகுதிகளும் காரணமாக அமைகின்றன. விதை மூலம் பரவும் பயிர் நோய்

காரணிகளைக் கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு கொல்லிகள் பயன் படுத்தப்படுகின்றன.

விதைநேர்த்தி மற்றும் நோய்க் காரணிகளை ஆரம்ப நிலை யிலேயே கட்டுப்படுத்த உதவுவது வரும் முன் காப்பு முறை ஆகும்.

ஒரு கிலோ விதையுடன் (பொதுவாக எல்லா விதைப்பயிர்கள்) 2 கிராம் திரம் அல்லது 2 கிராம் கார்பென்டசிம் அல்லது கார்பாக்சின் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைப்பதால் மண் மூலம் (Soil borne) பரவும் பயிர் நோய்களை தடுக்கலாம்.பூச்சி நோய்க் கண்காணிப்பு (Monitoring of Insect Pests and Diseases) பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த முதலில் செய்ய வேண்டியது அவற்றின் நடமாட்டத்தை அறிவதாகும் (Pest surveillance).

**குறிக்கோள்கள்**

- பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கண்டறிதல் அவற்றின் பாதிப்பினை மதிப்பிடுதல்
- வானிலையுடன் பூச்சி மற்றும் நோய்களுக்கு உள்ள தொடர்பைக் கண்டறிதல்
- நன்மை செய்யும் பூச்சிகளை அறிதல்
- மாறி வரும் பயிர் திட்டங்களால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிதல்
- தேவைக்கேற்ப பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல்
- பூச்சி நோய்கள் பரவியிருப்பதை முன்னறிவிப்பு செய்தல்

இந்த கண்காணிப்பை நிரந்தர வயல் ஆய்வு (Fixed plot survey), சுற்றித்திரி ஆய்வு (Roving survey) என இரு முறைகளில் மேற்கொள்ளலாம்.

**இந்த கண்காணிப்பை செய்வதற்கு உதவும் சாதனங்கள்**

உருப்பெருக்கிக் கண்ணாடி, பாலித்தீன் பைகள், மெல்லியதுணி, நாப்தலின் உருண்டைகள், பூச்சிகளை பிடிக்கும் வலை (Insect net), விளக்குப்பொறி, இனக்கவர்ச்சி பொறி, மஞ்சள் வண்ண ஒட்டு பொறி போன்றவை ஆகும்.

**நீக்கும் முறைகள்**

**இயற்பியல் முறை (Physical Method)**

வெப்பம், ஈரப்பதம், கதிர்வீச்சு, ஒலி, இடவசதி போன்ற பௌதிக அமைப்புக் குகளைப் பயன்படுத்தி பூச்சி, நோய்களைக் கட்டுப் படுத்துவது இயற்பியல் முறை பூச்சிக்கட்டுப்பாடு எனப்படும். வீட்டுத்

தோட்டங்கள், கண்ணாடி இல்லங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இம்முறை உதவிகரமாக இருக்கும். பூச்சிகள் 60-66°C வெப்பநிலையில் கொல்லப் படுகின்றன. இம்முறையைப் பயன்படுத்தி சேமிப்பு தானியப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

### உழவியல் முறை (Cultural Method)

சாதாரணமாக நாம் பயிரிடும் போது மேற்கொள்ளும் சாகுபடி முறைகளை அப்படியே கையாண்டு அல்லது சிறு சிறு மாறுதல்கள் செய்து பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு உழவியல் முறை (Cultural Method) என்று பெயர்.

ஆழ உழும் போது மண்ணில் வாழும் சில பூச்சிகளும், நோய்க் காரணிகளும், புதைக்கப்படுகின்றன. அல்லது மண்ணிற்கு மேலே கொண்டு வரப்பட்டு பறவைகளால் உண்ணப்படுகிறது.

உம். புரோடினியா, சிவப்புக் கம்பளிபுழு, கரையான், வேர்ப்புழு. பரிந்துரைக்கப்படும் அளவிற்கு அதிகமாகத் தழைச்சத்து உரமிடும் போது அது பூச்சி நோய் காரணிகளின் பெருக்கத்திற்குக் காரணமாகிறது.



## இரசாயன முறை (Chemical Method)

இரசாயனக் கூட்டுப்பொருட்களின் உதவியினால் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், பூசணங்கள், களைகள், எலிகள், நூற்புழுக்கள், சிலந்திகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் முறை இரசாயன முறை எனப்படும். இந்த இரசாயனக் கூட்டுப் பொருட்களுக்கு பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள் (Pesticides) என்று பெயர். எண்டோ சல்ஃபான், ஃபைட்டலான், கிரமாக்சோன்.

## இரசாயன கூட்டுப்பொருள் பூச்சிக்கொல்லிகள் (Insecticides)

- பேன்கொல்லிகள் (Acaricides or Miticides)
- எலிக்கொல்லிகள் (Rodenticides)
- நூற்புழுக்கொல்லிகள் (Nematicides)
- பூசணக்கொல்லிகள் (Fungicides)
- களைக்கொல்லிகள் (Herbicides or Weedicides)
- பேக்டீரியாகொல்லிகள் (Bactericides)

## கட்டுப்படுத்தும் தீங்குயிரிகள் பூச்சிகள் (Insects)

- சிலந்திகள் (Mites)
- எலிகள் (Rodents)
- நூற்புழுக்கள் (Nematodes)
- பூசணங்கள் (Fung)
- களைகள் (Weeds)
- பேக்டீரியா (Bacteria)

## தாவரப்பூச்சிக் கொல்லிகள் (Botanical Insecticides)

தாவரங்களின் பல்வேறு பாகங்களிலிருந்து கிடைக்கும் பொருட்கள் பூச்சிகளை அழிக்க பயன்படுகின்றன. இவற்றிற்கு தாவர பூச்சிக்கொல்லிகள் என்று பெயர். உ.ம். வேம்பு, நொச்சி, வசம்பு, புகையிலை.

இதன் மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்கள் தரமானதாகவும், உற்பத்திச் செலவு குறைவானதாகவும் இருக்கும்.

தகவல் : ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத்துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : poorny29@gmail.com

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**